**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO. MCOP. 96/2018**

**Deposition of R.W.1- சலேட் அம்மாள்**

**Dated: 31.01.2026**

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வழக்கு விபரங்கள் ஆவணங்களின் அடிப்படையில் தெரியும் என்றால் சரிதான். இறந்துபோன நபர் வாகன விபத்தில் தான் இறந்துபோனார், ஆனால் காப்பீடு விதிமீறல் உள்ளது. வாகனகத்தில் வேலை தொடர்பான பொருட்கள் ஏற்றி செல்லும் போது விபத்து நடைபெற்றது என்றால் சரிதான். 1வது எதிர்மனுதாரருக்கு ஓட்டுனர் உரிமம் உண்டு என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் 1வது எதிர்மனுதாரருக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என பொய்யாக கூறியுள்ளேன் என்றால் தற்போது தான் ஓட்டுனர் உரிமம் கிடைத்தது அதனால் அவ்வாறு கூறிவிட்டேன். ஆவணங்கள் எங்களுக்கு கிடைக்காததால் அது குறித்து மறுப்பு தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. இறந்துபோனவர் துாங்கியதால் விபத்து ஏற்பட்டதாக பிரேத பரிசோதனை அறிக்கையில் கூறவில்லை. விபத்திற்கு முன்னர் 2 வருடங்களாக வாகனத்தில் பொருட்களை ஏற்றி வந்து கொண்டிருந்தார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. இறந்துபோனவரின் வேலை மற்றும் வருமானம் பற்றி எனக்குத் தெரியாது. மனுதாரர்களுக்கு இழப்பீடு கிடைக்கக்கூடாது என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1வது எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.